**செ. கு. எண்: 113** **நாள்:21.09.2019**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை - 21.9.2019</u>

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், கீழையூர் சரகம், செருதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. நடுக்காட்டான் என்பவரின் மகன் திரு. செல்வமணி என்பவர் கடலில் மீன் பிடி பணியில் ஈடுபட்டிருந்த போது, கடலில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் வட்டம், வடக்குப்பொய்கைநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி அஞ்சம்மாள் என்பவரின் கணவர் திரு. கோவிந்தராஜ் என்பவர் கடலில் மீன் பிடி பணியில் ஈடுபட்டிருந்த போது, கடலில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் பாம்பன் மீன்பிடி தளத்திலிருந்து நாட்டுப்படகில் மீன்பிடி பணியில் ஈடுபட்டிருந்த திரு. அம்புரோஸ் என்பவரின் மகன் திரு. சிந்தாஸ் மற்றும் திரு ஆங்கிளிஸ் என்பவரின் மகன் திரு. மினோன் ஆகிய இரு மீனவர்களின் உடல்கள் சடலமாக கண்டெடுக்கப்பட்டது என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் வட்டம், கொல்லங்கோடு கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜோண் என்பவரின் மகன் திரு. சகாயம் மற்றும் திரு. ஜெபஸ்தியான் பிள்ளை என்பவரின் மகன் திரு. லூர்துராஜ் ஆகிய இரண்டு மீனவர்கள் மீன்பிடி பணியில் ஈடுபட்டிருந்த போது, படகு விபத்துக்குள்ளானதில் இரு மீனவர்களின் உடல்கள் சடலமாக கண்டெடுக்கப்பட்டது என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் வட்டம், ஏழுதேசம் கிராமத்தைச் சேர்ந்த திரு. அந்தோணிபிள்ளை என்பவரின் மகன் திரு. அருளிஸ் என்பவர் மீன் பிடி பணி முடிந்து கரை திரும்பும் போது, படகு விபத்துக்குள்ளானதில், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

மீன் பிடி பணியில் ஈடுபட்டிருந்த போது, படகு கவிழ்ந்து உயிரிழந்த திரு. செல்வமணி, திரு. கோவிந்தராஜ், திரு. சிந்தாஸ், திரு. மினோன், திரு. சகாயம், திரு. லூர்துராஜ் மற்றும் திரு. அருளிஸ் ஆகிய 7 நபர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட சம்பவங்களில் உயிரிழந்த 7 நபர்களின் குடும்பத்தினருக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**